நான்கைந்து வகுப்பார்கள் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் இந்த 20 சதவீதத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்திலே ஏதாவது வழிவகை உண்டா? மேலும் சில இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று அதாவது துளுவ வெள்ளாளர், தொழுவ வெள்ளாளர் என்று மாற்றி சர்ட்டிபிகேட் வாங்க முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபேர் தங்களுடைய வகுப்புகளின் பெயர்களை மாற்றித் தந்திரமாக இந்தச் சலுகைகளைப் பெற முயற்சித்தால், அது சுட்டிக்காட்டப்படுமேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மிகவும் பிற்பட்டுத்தப்பட்டோர் பட்டியலில் நான்கைந்து சமுதாயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி சேர்க்கப்பட்டிருந்தாலும் அது நம்முடைய உறுப்பினர் திரு. டேனியல் ராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 6000, 7000 பேர் என்ற அளவுக்குத்தான் மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் பெரிய எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைத்தல்

*2580—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க ஆய்வு செய்யப்பட்டுள்ளது?

9-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்தில் போளூரிலும், நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்

திலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அமைக்க இந்த அரசு முடிவு செய்து, ஒப்புதல் கடிதங்கள் (letter of intent) பெற விண்ணப்பங்கள் தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் கூட்டுறவு இணையத்திடமிருந்து பெற்று, அவைகளை மைய அரசிற்குப் பரிந்துரை செய்திருக்கிறது. அவற்றில், கள்ளக்குறிச்சி, கும்மிடிப்பூண்டி சர்க்கரை ஆலைகளுக்கான உரிமம், மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டில் 'தொழில்கள்' என்ற கொள்கைக் குறிப்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, நான்கு சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறை மூலம் புதிதாகத் துவங்குவதற்கான ஆணைகள் பெறப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நன்றி. அதோடு மட்டுமல்லாமல், 5 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுடைய விரிவாக்கம் துவங்கப்பட்டிருக்கிறது என்றும் அதிலே குறிப்பிட்டிருக்கிறது. அதிலே மயிலாடுதுறை பகுதியில், மணல்மேடு பட்டவர்த்தியில் இருக்கிற நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி சர்க்கரை ஆலை விரிவாக்கப் பணி தொடங்கப்படுமா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தேவைப்படும்போது உரிய நேரத்தில் தொடங்கப் பெறும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வடபாதிமங்கலத்தில் இயங்கிக் கொண்டிருந்த திரு. ஆரூரான் சர்க்கரை ஆலை இப்போது இயங்கவில்லை. அதனால் குத்தாலம், திருவிடைமருதூர் பகுதிகளில் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பால் தாங்கள் உற்பத்தி செய்த கரும்பை எடுத்துச் செல்வதால், ஏராளமான கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் அவர்கள் உட்படுகிறார்கள். லாரிகளும் கிடைப்பதில்லை. எனவே மணல்மேட்டில் அந்த ஆலை விரிவாக்கப்பட்டு துவங்கப்படும்போது அதற்குத் துணை ஆலையாக குத்தாலம் தொகுதியில் அந்த ஆலை அமைக்கப்படுமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டிக் கொள்வதோடு அரசின் மூலமாகவும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, எவ்வளவு பணிவோடு கேட்டுக் கொண்டாலும், தனிக் கேள்வி போட்டால்தான் நானும் பணிவோடு பதில் சொல்ல முடியும்.